| | | |
|---|---|---|
| பட்சி இறந்த தினம் | ... | 27 |
| பூர்வபட்ச கிரியாகிரமம் | ... | 28 |
| அமரபட்ச கிரியாகிரமம் | ... | 31 |
| பூர்வபட்ச உதாரணம் | ... | 33 |
| அமரபட்ச உதாரணம் | ... | 83 |
| பூர்வ பகற்பாவகம் | ... | 133 |
| பூர்வ இராப்பாவகம் | ... | 142 |
| அமரபகற்பாவகம் | ... | 148 |
| அமரஇராப் பாவகம் | ... | 155 |
| ஜாதகபாவகம் | ... | 162 |
| பிணிவீட்டுபாவகம் | ... | 170 |
| செயபாவகம் | ... | 176 |
| இருதுபாவகம் | ... | 185 |
| அட்டகன்மதின நிட்சயபாவகம் | ... | 189 |
| அட்சரமாரல்பாவகம் | ... | 203 |
| மூலிகைபாவகம் | ... | 209 |


உ

ஓம் குகாயநம:

ஸ்ரீநவக்கிரகசகாயம்.

# சூக்கும பஞ்சபட்சி நூல்.

## ஆக்கியோனுரை.

நெடிய கடலால் சூழப்பட்ட பூமியினிடத்து உதித்துள்ள மானிடர்கள் ஈடுபட்டு இல்லறம் துறவறம் இரண்டில் நல்வினைவசத்தராய் சிறப்புற்று, இன்பம் வழுவாதுகோரிய காரியங்கள் முட்டின்றி முடிந்து அறுகூலத்தை அடைவிக்கும் நல்வழியாகி பிரமன் றலையெழுத்தையுங் கரதலாமலகமொக்கக்காட்டும் பெருமையுடைத்தாகிய வேதசாகைகளில் ஒன்றாகிய சோதிடம் இதைச்சகலருந்தெரிந்து நடந்துகொள்ள வியலாதபடி பிரயாசைமிக்குள்ளதாக இருக்கிறது. அவ்வித பிரயாசையோடு கணிதஜோதிட நூலைக்கற்றாலும், இப் பஞ்சபட்சி நூலின்றி எவ்வித முகூர்த்த நியமனமுஞ் சரியாயிராதுகெட்டுவிடுமாதலால், சோதிடங் கற்றவரும், சோதிடங்கல்லாதவரும், அதிக பிரயோசன சந்

துட்டி அடையவேண்டுதற்கு இந்நூல் அதியவசியமெ ன்பதிற் சிறிதுஞ் சந்தேகமில்லை.

இந்நூல் அறியாது கணிதம், ஜோதிடம் முதலிய பல சாஸ்திர வல்லுநராகினும், முகூர்த்ததினம் சரி யாக வைக்கமுடியாதென்பதும், எவ்வித சாஸ்திரப் பயிற்சியுமின்றிப் பஞ்சபட்சி சாஸ்திரத்தின் மட்டும் வல்லவர்கள் முகூர்த்ததினம் சரியாகவைக்க முடியும் என்பதும், பஞ்சபட்சி சாஸ்திரத்துக்குமேல் பிரயோ சனம்தரும் சாஸ்திரம் இல்லையென்பதும், குமாரசு வாமி தேசிகர் திருவாய்மலர்ந்தருளிய, குமாரசு வாமியம், சதாமுகூர்த்தப்படலம் 3, 4 கவிகளால் சிறப்பித்துக்கூறுவனகாண்க.

"உத்தமம் பஞ்சாங்க முதயத்தியல்பு வேளை
யோரை சரம் பட்சி வருக்கம் மவத்தையோக
மித்திரமண்டல மாதம் பட்ச மயனம் பால்
விண்ணமலங் கமலம் விலோசன முயிர் மேடாதி
சுத்த மமிர்தங் காலங் கெண முருவ னதிபஞ்
சுபர்விழிப்புற் றென்றுக விவை சுபமுற்றினு
மத்தினந் தன்னியநாட்கிதடாலம் விடகடிகை
யவமிருத் தந்நாட்பறவை படிலவர்க்கப்படியே."



(இ - ள்) திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கர ணம் உத்தமமாக இருக்க இதன்மேலும் உதயலக்கினம், வேளை, ஓரை, சரம், பட்சி, வர்க்கம், அவத்தையோகம், மித்திரமண்டலதினம் மாதம், பட்சம், அயனம், பாற்றி னம், ஆகாச நிர்மலம், செலவர்க்கம், கண்ணுள்ளது, சீவன், மேடாதி சுத்தம், அமிர்தவர்க்கம், காலம், கெணம், உருவம், அதிபம், சுபர்விழிப்பு இவை முதலானவையெல்லாஞ் சுபசேகரமாக சேகரித்ததினமா னாலும் அந்த தினத்தில் தன்னிய நாள்வரில் மேற்கூறிய சுபசேகரவர்க்கமெல்லாம் நிர்ப்பலமென்ப. விடகடிகை யாகில் அவமிருந்து என்ப. படுபட்சியாகில் மரண மென்ப. எ - று.

படித்தலத்தெப்பொழுதினுஞ்செய்சஞ்சாரமுகூர்த்தம்
பஞ்சாங்கமோரைசரம்வேளையியல்பாகத்
தோடித்தினந்தன்னியநாணஞ்சலதமிர்தகடிகைக் [ம்
தோன்றுதல்புட்கரசெனினிர்த்தோசமெத்தோஷமுமா

(இ - ள்) திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கர ணம், ஓரை சரம், வேளை இவைகளெல்லாம் அசுமாகச் சேகரித்த தினமானாலும், தன்னியநாளும், விடக்கடி

கையும் இலாமல் அமிர்தகடிகை உதயகாலம் பட்சிக்கு அரசாக இருக்கில் அத்தின முகுர்த்தத்திலுள்ள தோஷமெல்லாம் நிர்த்தோஷமாக அரசுக்குள்ள பலாபலனைத்தரும் என்பதாம்.

ஆகைப்பால் உலகினர் யாவரும் அடியன் எழுதிய நூலின் சார்ப்பே நடந்து நல்வழிப் பிரவேசித்தாராய் இறைவன் அடியை மறவாதிருக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

இங்ஙனம்,
கவிராயர்,
சு. இராமசாமி.
நூலாசிரியன்.

உ

ஓம் குசாயநம:
ஸ்ரீ நவக்கிரகசகாயம்.

# முகவுரை.

உலகிடையதிகமுலவாதிருக்கும். இப்பெரிய அறிய நூல் சூரசங்காரத்தின் பொருட்டு சத்திதேவியாரால் சுப்பிரமணியருக்கு போதிக்கப்பட்டு இவரால் குரு-முனிக்கும், குருமுனி பதினெண் சித்தருக்கும், சித்தர்கள் மாணவ கூட்டங்களுக்கும் கூறினர். இவர்கள் கூறிய நூற்களில் ஒருவர் சொன்னதை ஒருவர் சொல்லாது மாறுபடக்கூறியுள்ளார்களென தற்கால சாஸ்திரிகள் சொல்லிக்கொண்டு ஆராய்ந்தறியாது மயக்கினுளார்கள், இதை எனது ஆசிரியரோடு பன்முறை பலயிடங்களில் பலசமயத்தும் வாதாடி நிர்ணயந்தெரிந்தும் பட்சிசாஸ்திரிகள் அநேக இடங்களில் என்னைச் சந்தித்து வாதாடி அவர்கள் வைத்திருந்த கொள்கை மாறுதல் எனத்தெரிந்துகொண்டு சமாதானம் சொல்லி

விஷயம் தெரிந்து முன்னோர் சொல்லியுள்ள சர்வ முறையும் ஒருமைப்பட்டதெனத் தெரிந்துகொண்டு பட்சியை நல் வழியில் சரியாக நடத்தி அதனால் வரும் பயனை அநுபவித்துக்கொண்டுள்ளார்.

பட்சி சாஸ்திரத்தில் சித்தர்களால் பரியாயப்பெயரால் மூலிகை, கருமானம், அட்ட கன்மநாள் இவை அறிவாளராலும் கண்டு அட்டகன்மம் செய்யமுடியாதபடி கூறியுள்ளார்கள். அவ்விஷயம் தெரியாது சில நாள் வேதனைப்பட்ட மனத்தையுடையவனாய் குருவின் பதத்தை நாடிக்கொண்டிருந்தனன்.

இவை நிற்க

எனது மூதாதையர் ஐவர், ஜோதிடம், வைத்தியம், மாந்திரீகம், பிரசங்கம், விவசாயம் முதலிய வேதாங்கசத்தில் வல்லுநராக இருந்து வந்தவர்களில் ஒருவரான மாந்திரீகர், கொடிங்கியம், அகரம், பெ. இராமசாமிக்கவுண்டர் அவர்கள் தந்தைக்கு நண்பராக இருந்தவர், இவர், இராமசாமிக்கவுண்டர் சிறுவயதாயிருக்குங்காலத்தில் ஓர் ஏட்டைக்கையில் கொடுத்துப் பத்திரமாகவை நான் வந்தபோது கொடு என்று சொல்லிவிட்டுப்போனவர் சமாதி அடைந்தார்.



நிற்க

மேல்க்கண்ட இராமசாமிக்கவுண்டருக்கு எனது தந்தை சுப்பயஜோதிடரும் பாலிய நட்பாதலால், அவருடைய அகத்திற்கு நான் சென்று பட்சிநூலைப்பற்றி சம்பாஷித்துக்கொண்டிருந்தபோது, பழய ஞாபகந் தோன்றி, அந்த ஏட்டை எடுத்துவந்து கொடுத்தார் நான் விரித்துப்பார்த்தபோது நான் கோரிய விஷயங்கள் மிளிர்ந்திருப்பனக்கண்டு குருவின் தந்த ஞானப்பிரசாதமே பூர்வ புண்ணியம் வாய்த்ததென, (பழங்குருடன் விளங்குங் கண்ணொளி பெற்றனபோல்) சந்தோஷித்தேன்.

ஏட்டில் இருந்தவை

பட்சி நடப்பு விபரம், நிறப்பட்சி, மூலிகை, கருமானம், அட்டகன்மம், வெழிப்பிரவேஷம் ஆகி துற்காரியநடமாடுமென, முனிவர் கூறுமதேயெனச்சொ

ன்ன சொல்லை நிதானிக்காது எழுதியிருப்பது என்னை யெனயோசிக்கில், பிற்காலத்தவழியினர் தெரிந்து நற்கதியடையவேண்டுமென்று நினைத்திருந்தாரெனப் புலனாகிறது. அவர் மூலிகை எழுதாமலிருந்திருப்பாரெனில் யான்பாவஞ்செய்தவனேயாம். அவர் எழுதியிருத்தலால் தவத்தில் மிகுந்தவனானேன்.

## நூல் எழுதிய காரணம்.

இந்தப்பஞ்சபட்சிகளின் சூட்சமதொழிலை நடத்தி யுலகோர் பழகிக்கொண்டால், அவர்கள் செய்கின்ற காரியம் முட்டின்றி முடிந்து சந்தோஷத்தோடு வாழ இடமுண்டாமென்று பலபேருடைய தூண்டுதலால், சிரமத்தோடு எனது மனோலாலயத்தெழுந்தருளி உலகினர்க்கருளும் முருகன் அருளால் எழுதிமுடித்துப் பல நண்பருக்குந் தந்தனன். பதிப்பித்தாலொழியப் பலரும் பிரயோஜனத்தையடைய முடியாது என்று, பல தொழிலாளிகளின் வேண்டுகோளால் சில புலவர் பெருமான்களுக்கு காட்டியபோது, நீ கருந்தமிழாம் அர்த்தமறியாது பலவெண்பாக்கள் எழுதியுள்ளாய். அவ்விதமிருப்பின், அதிகம் படியாதவர்கள். தெரிந்து



கொள்ளமுடியாது. வெண்டமிழால் (கரையிலெடுத்த சலம்போல்) யாவருமறிந்துகொள்ளும்படி இருக்கவேண்டுமென்று கூறினர். அப்பணி சிரமேற்கொண்டு. (என்றும் நன்றே செய்க, நன்றும் இன்றே செய்க), என்ற ஆன்றோர் வாக்கை மதித்து, உடன் வெண்சொற்களால், பலருக்கும் பயன் விளங்கும்படி எழுதிப் பதிப்பித்திருக்கிறேன்.

## இந்நூலின் முறையாவது.

சென்ம நட்சத்திரப்பட்சி, அல்லது நாம நட்சத்திரப்பட்சி, ஊண் அரசாக இருக்குங்காலத்தின், எந்தவித காரியத்துட் பிரவேசிக்கினும், அது மனோ நிம்மதி தரும்படி பலிக்கும். அநுபவத்தில் நடாத்தி அநுபவித்த புண்ணிய சிலரே அவ்வின்பம் அறிவார்.

ஊண், அரசுள்ள சேவல், ஆடு, மனிதன் இன்னும் எல்லா சீவனும், தூக்கம், சாவுள்ள சீவனை யுத்தம் செய்து செயிப்பது, அட்டகன்மத்தின் மாரண சம்பந்தமாகாது. அதாவது,

ஒரு பட்சிக்குள்ள மூலிகை இன்னதென்பது, ஆசிரியரை வழிபட்டுக்கண்டு, பட்சி, அரசுநேரத்தில் மூலிகை எடுத்துக் குளிசமாடி சேவல் காலினும்,

கிடாய் கழுத்திலும், மனிதர் இடை அல்லது கையிலும் கட்டிவிட்டால் செயிக்குங் கிரமறியலாம். மனிதன் மட்டும் மதிப்பின் பொருட்டு செய்பாவாம். பட்சிகள் முதலிய போர் செய்யுஞ் சீவன்கட்கெல்லாம் இப்படிச்செய்வது மகா பாவம் என்றும், வம்சசீணம் உண்டாமென்றும், சித்தர்கள் கூறியுள்ளார்கள். மூலிகை மூலமாக செய்யும் யுத்த செயமானது மாரண சம்பந்த மென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இவ்விஷயங்களில் பிரவேசியாமலும், கூறாத ஆசிரியர் மேலும் வருத்தப்படாது இருந்து, தொழில் மட்டும் கிரமமாய் நடத்தி, அதனால் வரும் பிரயோசனத்தை அநுபவித்து நல்வழிப் பிரவேசித்தாய் இறைவன் அடியினை மறவாதிருக்க வேண்டுமாய், அன்பருடைய பாதபத்மங்களை நமஸ்கரித்துக்கேட்டுக்கொள்கின்றேன்.

"அரியக்கற் றசடற்றார் கண்ணுந்தெரியுங்கா
லின்மை யரிதே வெளிறு"
குணநாடிக் குற்றமுநாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

இங்ஙனம், சி. இராமசாமி,
ஜோதிட கணித வைத்திய சிற்ப சாஸ்திர பண்டிதன்,
எரிசினம்பட்டி.

உ

ஓம் குகாயநம :

உடுமலைப்பேட்டைத் தாலூகா உடுக்கம்பாளையம்.

## கோ. சி. மலையாக்கவுண்டர்

அவர்கள் எழுதிய வியப்புரை.

உலகத்தினிடத்து, அஞ்ஞான மழிந்து முயற்சியூக்கம் உண்டாகி, சீவன்கள் குதூகலத்துடன் காரியம் பிரவேசிப்பதற்கு வேண்டியமுறை இதுகாறும் வெளிப்போந்துலாவலின்றி ஏட்டுப்பிரதிகளிற் பொதிந்து மறைந்து கிடந்தன. அதிற் சிலபாகம், உலகிடையுலவினும் முக்கியமானவை வெளிவராது. ஒழிந்தவற்றைப் பலவிடங்களை நாடித்தன்னுள்ளதை எள்ளளவேனும் காட்டாது மறைத்துக்கொண்டு, முறையெலாந்தெரிந்தும், இச்சாஸ்திராநுபவத்தை நன்கு பன்முறைகளில் பண்ணோர்க்குந் தெரியும்படி அநேக காரியங்களைப் பரிசித்து சரியெனத்தெரிந்து தன் பக்தி மார்க்க காரியங்களை ஆர்ச்சித்துக் கொண்டிருந்த இந்நூலாசிரியனாகிய அன்பனை பலபேர்கள் தூண்டுதலால் உலக சௌகரியத்தின்பொருட்டு அச்சிற் பதிப்பிக்கும்படி செய்தனம்.

இந்நூல் அதி பிரயோசனத்தை உலகினற்குந் தந்து நன்மை பாராட்டுதலால், ஆத்ம ரட்சகன் என்றும், சத்துருக்கள் உண்டான காலத்தில் சுலபவழியில் செயிக்குந் திறனிருப்பதால் சகோதரன் என்றும், அநேக காரியத்தை முட்டின்றி முடித்துந்தந்து, மனோரம்மியந்தருவதால் ஜெயாநந்தன் என்றும், மெலிந்தோனையும், வலிந்தானுக்கும் வழியுரைத்தலால் சஞ்சீவி என்றும், பஞ்சேந்திரியங்களுக்கு வேறு பேரிட்டு, அதன் தொழிலைப் பகிர்முகமாகக் காட்டலால், ஞானி என்றும், இவ்விதமான அரியபெயர்கள் அநேகத்திற்கமையும். இவ்வற்புத செய்கைகளமைந்த இந்நூல் சர்வத்தினருக்கும் நன்மைதருமின்பமாம்.

இந்நூலாசிரியன் பாலியயவ்வனத்தில் இவ்விஷயங்களையெல்லாந் தெரிந்திருப்பதால், முன்ஜென்ம தொடர்பு கல்வியென்பது மெச்சத்தகுந்தது. வாலிப சேட்டைமிகுக்கும் இவ்வயதில் இந்தவித சற்குணமும் முருகப்பிரான்மீது பரிபூரண பக்தியும் உண்டாயிருப்பது ஆனந்திக்கத்தகுந்தது.

இந்நூலாசிரியனுடைய யவ்வன சற்குணத்தைப் பற்றி ஞானவாசிட்டம் வைராக்கிய பிரகரணம் 78-வது கவியில் கூறியுள்ளன.



“எந்திரத்தோ ரெவ்வனமா மிடையூற்றைக் கடந்தெழுதி னேற வல்லோ, ரத்திரத்தோ ரேபுருட ரவர்களே தொழர்க்குறிய ரவரே சான்றோர், மெய்த் திரத்தோர் சேரிடமாய் விநய நிதிபடைத்தருளால் விளங்கா நிற்குஞ், சுத்தகுண யெவ்வன மிவ்வுலகி லுளதோ விசும்பிற் சூழ்காடுண்டோ”.

என்று எவ்வன சற்குணத்தை மெச்சியுளது. இத்தன்மை தவத்தினனாகிய இந்நூலாசிரிய இராமசாமிஇதற்குமுன் பரஞனந்தமான்மியம், இராமனந்தாதி, முருகனந்தாதி, குகபஞ்சகம், திருமாலைமுதலிய அருட்பாக்களைப்பாடியும் இன்னும் கூடிய சீக்கிரம் எந்நூலுதவியுமின்றி சோதிடங்கற்க இயந்த ஸ்ரீராமசேகரமும் வெளியிடத்தயாரிக்கும் இந்நூலாசிரியனுக்கு நீண்ட ஆயுளும், தீர்க்க திடகாத்திரமும் தந்தருள வேண்டுமென எல்லாம் வல்லபூரணனை வந்திக்குமாறு உலகினரைத் தாழ்ந்து கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்கனம்,

கோ. சீ. மலையாக்கவுண்டர்,

உடுக்கம்பாளையம்.

ஓம் குகாயநம :

# சாற்றுக்கவிகள்.

சென்னை யூனிவர் ஸிட்டியின் செனேட் அகடாமிகல்
கவுன்சில் இவைகளின் மெம்பர்
கோயமுத்தூர் வக்கீல் வித்வ ஸ்ரீமான்
C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள்
இயற்றிய—கலித்துறை.

சோதிடங் கைகொண்டு சொல்லுந்தமிழின் சுவைப்புல
ஓதிடு நூல்கள் வல ராமசாமி யுவந்தளித்தான் [வன்
மாதிடச் சூக்கும பஞ்சபட்சிந்நூல் மகிதலத்தில்
வாதிடும் பல்வழி யாய்வோர் மனத்து மதிப்புறவே.

---

குமாரலிங்கம்
ம. பழனிச்சாமிக்கவுண்டர் என்கிற
பிரபந்த வித்வான்
ஸ்ரீ திருவேங்கிடராமாநுஜதாசர் அவர்கள்
இயற்றிய சாற்றுக்கவி
நிலமண்டல ஆசிரியப்பா.

சேவலந் துவசன் கோவலன் மருகன்
காவலந் துணையடி யாவலன் சானவி
வில்லம் முடிபுனை புல்ல மூர்வோன்
சொல்லங் கனிதேன் வெல்ல மெனப்புகல்



நல்லவர் நகரா னல்லவர் நகரான்
பொற்பகக் காமன் பொலிவதிற் காமன்
விற்பனக் கரியான் மேலவர்க் கரியான்
தயவுயர் கொடியான் தாமதர்க் கொடியான்
செயசெங் கோலான் நயசெங் கோலான்
மதியருள் நாடான் வயங்கற நாடான்
நிதிகதிப் பரியன் நியமமும் பரியன்
கலைவித மலையான் கலைவித மலையான்
நிலைபொறைத் தாமன் நேயமார் தாமன்
தவமணி முரசான் தவறது முரசான்
சிவநெறி யாளுன் திருநெறி யாளுன்
பொன்மிகு தசாங்க மன்னிப சீலன்
முன்னிய ஞான முன்னிய லோலன்
போதிடங் கொண்டோ னோதிடங் கவினுஞ்
சோதிடங் கற்று மாதிடங் குறித்தோன்
விரிசனர் மகிழும் எரிசனம் பட்டி
பரிசனர்க் கின்பத் தெரிசனந் தருங்கொடை
நேமிநே ராம சாமிநா மத்தோன்
தெமிளிர் செந்தமிழ் தாமிகு தொடர்பால்
சூக்கும பஞ்சப் பட்சித் தொகைநூல்
பாக்கிய மெனப்புவி பகர்ந்தனன் மாதோ.

உ

ஓம் குகாயநம :

ஸ்ரீ நவக்கிரக சகாயம்

# சூக்கும பஞ்சபட்சி நூல்.

காப்பு.

நீலசித்தர் மெஞ்ஞானர் நீந்திக் கடந்தவழிப்
பெலபஞ்ச பட்சிதனாற் பேசப்—புலவனுக்கு
முன்னோ னவனடியார் முன்னி னவைமுடிப்பான்
என்னோன் பவனடிமை யே

வழிபடு கடவுள் வணக்கம்.

வானிறந்த மால்மருகன் மாமுருக னுலுரைத்த
ஞான வழிக்கின்பன—வான
பஞ்சபட்சி நூலதனைப் பகர நலம் பெறுகும்
நெஞ்சுட் குகனருளி னோர்

நூலறிந்த வழி.

பஞ்சபட்சி யுண்மை படித்தோர் மிகப்பஞ்சம்
அஞ்சாதீ ரின்னூ லறிவூட்டும்—நெஞ்சலுக்கப்
பலபேர்க்கு நானடிமைப் பட்டே னிவைதெரிந்
உலகோர்க்கு நன்மை பெறவும் [தேன்

உ

ஓம் குகாயநம :

ஸ்ரீ நவக்கிரஹ சகாயம்.

# பட்சி பாவகம் நூல்.

பெயர் பட்சி.

ஆயீயூ யேயோனே ரானவரி முதலாய்
ஞனீனூ னேனோவன் னம்வரையே—தானுற்ற
வல்லூராந் தைக்காகம் மாகோழி யாமயில்தா
னெல்லா மடைந்தவகை யே.

(இ - ள்) அ, ஆ இந்த உயிர்முதல் ன, ஞ வரையுள் உயிர் மெய்யெழுத்துக்களை முதலாகக்கொண்ட பெயருடையவர்க்கு பட்சி (வல்லூறு)

நம்மனோரிடத்திற்கு ஏதோ காரியத்துக்கு வந்தவுடன் இந்த எழுத்தின் மூதலையுடைய வாக்கியம் அவன் வாயிலிருந்து புறப்பட்டால் இதே பட்சிதான். மற்றவைக்கும் இவ்விதமே தெரிந்துகொள்ளவேண்டும். சந்தேகப்பட்ட மனிதன் ஒருவன் நம்மை நாடிவந்து, வல்லூறுப்பட்சி எழுத்துள்ள வாக்கியம் முதலில்சொன்

னால், உண்மையாகப் பாாக்க வந்தவன் என்றும், ஆந்தைப்பட்சியைச் சொன்னால், நம்மோடு பொய்பேசுவான் என்றும், காகத்தைச் சொன்னால் திருட்டுத்தனமாக வந்தவனென்றும், கோழிப்பட்சியைச்சொன்னால் அவன் கூப்பிட்டபோது அவனோடு பேசக்கூடாது சண்டைக்கு வந்தவனென்றும், மயில்பேச்சைச்சொன்னால் கலகம்செய்ய வந்தவனென்றும், தெரியவேண்டும்.

இ, ஈ இந்த உயிர்முதல் இவை சேரலான ணி, ணீ வரையுள்ள உயிர் மெய் முதலாகக் கொண்டவருக்கு பட்சி.

(ஆந்தை.)

உ, ஊ இந்த உயிர் முதல் இவை சேரலான ணு, ணூ வரையுள்ள உயிர்மெய் முதலாகக்கொண்டவர் பட்சி.

(காகம்.)

எ, ஏ, இந்த உயிர் முதல் இவைசேரலான ணெ, ணே வரையுள்ள உயிர்மெய் முதலாகக் கொண்ட வர் பட்சி.

(கோழி)



ஒ, ஓ இந்த உயிர்முதல் இவை சேரலான ணொ, ணோ வரையுள்ள உயிர்மெய் முதலாகக்கொண்டபட்சி.

(மயில்)

---

## நட்சத்திரப்பட்சி.

சீருடைய அசுபதி நேரைந்தும் வல்லூர்
சிறப்பான ஆதிரைநேர் ஆறும் ஆந்தை
பேருடைய உத்திரநேர் ஐந்தும் காகம்
பெலமான அநுடம் நேர் ஆறும் கோழி
நேருடைய அவிட்டம் நேர் ஐந்தும் கொண்ட
நிதிமயிலே யுலகிடையாய் செனித்த யாவும்
பேருடைய விவ்வகையே பட்சி ரூபம்
பேசிநிவாய் மறைவிதித்த பெலபிதாமே.

(இ - ள்) அசுபதி, பரணி, கார்த்திகை, ரோகணி, மிருகசீரிடம் இதில் பிறந்த மனிதன்-கோழி. வல்லூறு ஆடு, மாடு, காடை, கவுதாரி முதலிய பட்சிகள் ஜிவன்களெல்லாம் வல்லூறு,

"கோழிச்சண்டை ஜெயிக்க விரும்பினவர் அது பிறந்த நாட் பட்சிகண்டு ஊணாசு நேரத்தில் விட வேண்டும். காடை பிடிக்கவேண்டுபவர், கவுதாரி பிடி

க்கவேண்டுபவர் இவ்விதமே தெரிந்து நடக்கவும். நிற த்திலும் பட்சிபார்த்து விடலாம்"

திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம் மகம், பூரம் இதிற் பிறந்தன — ஆந்தை

உத்திரம், அத்தம், சித்திரை, சோதி விசாகம் இதிற் பிறந்தன — காகம்

அநுடம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம் இதிற் பிறந்தன — கோழி

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி இதிற் பிறந்தன — மயில்.

"இம்முறை சர்வகாரியம் செய்ப சிறந்தனவாகும்"

---

## வளர்பிறை நிறப்பட்சி

வல்லூறு தங்க நிறம் வல்லாந்தை வெள்ளையதாம்
நல்ல காகஞ் சிகப்பு நற்கோழி—வல்ல பச்சை
மயிலே கருப்பாகும் வந்தநிற மாகுமிது
இயலாய் தெரிந்துகொளுமே.

(இ - ள்) பொன்னிறம் வல்லூறு, வெழுப்பு ஆந்தை, சிவப்பு காகம், பசுப்பு கோழி, கருப்பு மயில்.

(எ - று) இதை உலக வழக்கில் மூப்பக்கமாம்.



## தேய்பிறை நிறப்பட்சி

---

ஆந்தை சிகப்புநிறம் அக்காகம் தங்கநிறம்
சாந்த மயில்பசுப்புத் தாம்கோழி—நேந்தவெள்ளை
வல்லூர் மிகக்கருப்பு வண்ணக் கனதனத்தாய்
எல்லாம் ஞகன் செயலதே.

(இ - ள்) சிகப்பு ஆந்தை, பொன்னிறம் காகம், பசுப்பு மயில், வெள்ளை கோழி, கருப்பு வல்லூறு,
(எ - று) இது உலக வழக்கிற்பிப்பக்கமாம்.

"இவை சேவலுக்குறியது"

(சேவல் பிறந்த நாட்கண்டார் நட்சத்திரப்படி தொழில் கண்டு போருக்குவிட நன்று செயம்.

## திதிப்பட்சி.

| | | | |
|---|---|---|---|
| பிரதமை | - சஷ்டி | - ஏகாதசி | - வல்லூறு |
| துதிகை | - சப்தமி | - துவாதசி | - ஆந்தை |
| திரிதிகை | - அட்டமி | - திரயோதசி | - காகம் |
| சதுர்த்தி | - நவமி | - சதுர்த்தசி | - கோழி |
| பஞ்சமி | - தசமி | - பூரணை | - மயில். |

"இவை மானிடர்க்குறியது"

## இலக்குனப்பட்சி.

மேடம் - விருட்சிகம் - சிங்கம் - வல்லூறு
மிதுனம் - கடகம் - கன்னி - ஆந்தை
தனுசு - மீனம் காகம்
துலாம் - ரிடபம் கோழி
மகரம் - கும்பம் மயில்

"மானுடர்கட்குறியது"

திதி, நட்சத்திரம், இலக்குனம் இவைகட்கெல்லாம் ஒரு பட்சியாக வந்தவன், படுபட்சி நாளில் உதித்தவனாலும், ஊண், அரசு நேரம் பிறந்தானாகில், அவன் சர்வசிரேஷ்ட பூமானாய் கீர்த்தியில் இராஜசமான வித்துவானாகவும், அதிகம் ஆயுளுடையவனுமாவானென ஆய்ந்தறிந்த அறிவுடையார் பலர் ஆக்கிய நூற்களிற் பறந்து கிடக்கின்றன. மேற்கண்ட மாதிரி பிறந்து தற்காலத்தும் உள்ளார்கள். இது கண்கண்ட சாட்சியாக விளங்குகிறது.

### உதாரணம்.

கலியுகம் 5012, பரிவிருத்தி 24, விரோதிகிருது வரு சித்திரைமீ 17௳ சனிக்கிழமை 19 நாடி 30 விநாடிகை



க்கு ஜெனனம். வளர்பிறை, பிரதமதிதி, பரணி நட்சத்திரம், சிங்கலக்குனம், பெயர் ராமசாமி, இவைகட்குப் பட்சி வல்லூறுப்பட்சி. பூர்வபட்சத்தில் படுபட்சியாகியது. சனிக்கிழமை சனியோரையானதால் படுபட்சி தான் எந்த வகையினும் சந்தேகமே கிடையாது.

| | | | |
|---|---|---|---|
| | கு. ச<br>பு.<br>சனி<br>ரா. மா | சு. | |
| செ. | இராசி. | | |
| | | | ல. |
| | | வி.<br>கே. | |

| | | | |
|---|---|---|---|
| வி.<br>கே. | சு. | | ல. |
| | அம்சம். | | |
| | | | கு.<br>மா.<br>சனி. |
| | பு.<br>செ. | ச. | ரா. |

சுக்கிரதிசை நின்றது வருடம் 8, மாதம் 9, நாள் 26.

## சர்வ சக்கரம்.

| 11 | 10 | 8 | 19 | 3 |
|---|---|---|---|---|
| வல்லூறு | ஆந்தை | காகம் | கோழி | மயில் |
| பொன் | வெள்ளி | செம்பு | வெண்கலம் | இரும்பு. |
| பிரிதிவு | அப்பு | தேயு | வாய்வு | ஆகாயம் |
| பூமி | சலம் | அக்கினி | காற்று | புகை. |
| நாற்கோணம் | மூன்றாம் பிறைபோல் | முக்கோணம். | அறுகோணம். | வட்ட வடிவம். |
| ந | ம | சி | வ | ய |
| கிழக்கு | தெற்கு | மேற்கு | வடக்கு | மத்தியம். |



### பகைப்பட்சி.

வல்லூறு மாந்தை மதிக்காகங் கோழிமயில்
எல்லார்க்கும் பக்கத் திருக்கின்ற—வல்லனதே
பகையாந் தெரிக பருவமுள் ளம்மயிலே
தொகையா மிதுவகையே சொல்

(இ - ள்) வல்லூருக்கு ஆந்தை பகை, ஆந்தைக்குக் காகம் பகை, காகத்துக்குக் கோழி பகை, கோழிக்கு மயில் பகை (எ - று.)

### திக்குப்பட்சி.

சீர்கிழக்கு வல்லூறு தெற்காந்தை மேற்குப்
பேர் காக முத்தரத்துப்பின் கோழி—நேர்மத்தி
மயிலென்னவோது மயில்போற்றிருச் சாய்கை
குயிலென்ன மொழியனமே கூர்.

(இ - ள்) கிழக்கு—வல்லூறு
தெற்கு—ஆந்தை
மேற்கு—காகம்
வடக்கு—கோழி
மத்தியம்—மயில்